Deposition of witness

(Chapter XXII Code of Criminal Procedure)

கிருஷ்ணகிரி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கிருஷ்ணகிரி

| அமர்வு வழக்கு எண். | SC.No. 197 of 2019 | அரசு தரப்பு | அ.சா.6 |
|---|---|---|---|
| பெயர் | திரு. துரைசாமி | எதிரி தரப்பு | |
| தகப்பனார் பெயர் | | வயது | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | | |

**(எதிரி ஆஜரில்லை, 317 மனு தாக்கல் செய்யப்பட்டதின் பேரில், மனு அனுமதிக்கப்பட்டது)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 of 05th day of February 2025.**

**முதல் விசாரணை**

நான் மேட்டு சூளக்கரையில் குடியிருந்து வருகிறேன். நான் வேலை எதுவும் செய்யவில்லை, வீட்டோடு உள்ளேன். இன்றிலிருந்து சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக நான் என்னுடைய கன்றுக்குட்டியை என்னுடைய தோட்டத்தில் கட்டிவிட்டு, மாலை 4.00 மணிக்கு என்னுடைய வீட்டிற்கு வந்துக்கொண்டிருந்தேன். என்னுடைய நிலமானது சூளக்கரைக்கு ரோட்டிற்கு அருகே உள்ளது. நான் வீட்டிலிருந்து தோட்டத்திற்கு சென்ற போது என் நிலத்திற்கு அருகில் உள்ள ரோட்டில் SMBS என்ற பெயர் கொண்ட பேருந்தானது சிங்காரப்பேட்டையிலிருந்து கிருஷ்ணகிரிக்கு வரும் பேருந்து தீப்பிடித்து எரிந்துக்கொண்டிருந்தது. அப்போது அந்த இடத்தில் வேறு யாரும் இல்லை. பின்னிட்டு அந்த வாகனம் எப்படி தீப்பிடித்தது என்ற விவரம் எனக்கு தெரியாது, அந்த வாகனத்தை எடுத்து சென்றுவிட்டார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால், அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சி என்று அறிவித்து. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி அனுமதி கோரியதின் அடிப்படையில், அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

போலீசார் என்னை விசாரித்த போது, என்னுடைய விசாரணையில் 25.06.2021 தேதி இரவு 8.30 மணிக்கு கல்லாவி – போச்சம்பள்ளி போகும் வழியில் மேட்டு சூளக்கரை பஸ் ஸ்டாப் தாண்டி தான் என்னுடைய கொட்டாய் உள்ளது என்றால் சரிதான். நான் அங்கு சென்றுக்கொண்டிருந்த போது தான் கல்லாவியிலிருந்து SMBS பேருந்தானது செங்கம் – கிருஷ்ணகிரி நோக்கி வந்துக்கொண்டிருந்தது என்றால் சரிதான். விடுதலை சிறுத்தை இயக்கத்தை சார்ந்த முனுசாமி, அழகிரி, ரவி, ஜெயசீலன், ஆறுமுகம், முருகன், செந்தில், குமார், கிருஷ்ணமூர்த்தி, மற்றொரு செந்தில், ராமசாமி, வரதராஜ், கிருஷ்ணன், முருகன், ரமேஷ், மூர்த்தி, பொன்னரசு, திருமால், சங்கர், பர்குணன், பெயிண்டர் தற்போது இறந்து போன மாதேஷ்வரன், வெங்கடேசன், சக்திவேல், சிவசங்கர் ஆகியோர்கள் சேர்ந்துக்கொண்டு பேருந்தை வழிமறித்து பஸ்ஸை நிறுத்துடா என்று கூறினார்கள் என்றும், அதனால் டிரைவர் வண்டியை நிறுத்தினார் என்றும், அப்போது அவர்கள் திருமாவளனை விடுதலை செய் என்று கோஷம் போட்டுக்கொண்டு, முனுசாமி, ஆறுமுகம், பர்குணன், செந்தில்குமார், வரதராஜ், கிருஷ்ணன், முருகன், மூர்த்தி, ரமேஷ், திருமால் பெட்ரோல் நிரம்பிய பாட்டில்களை எடுத்துவந்தார்கள் என்றும், அவர்களில் முனுசாமி, ஆறுமுகம், பர்குணன், செந்தில்குமார், வரதராஜ், கிருஷ்ணன் ஆகியோர்கள் பேருந்திற்குள்ளே பெட்ரோல் பாட்டில்களை ஊற்றி நெருப்பு வைத்தார்கள் என்றும், நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் அது பொய்யாகும், நான் போலீசாரை பார்க்கவில்லை.

டீசல் டேங்கை பெயிண்டர் மாதேஷ்வரன், சக்திவேல், சங்கர் ஆகியோர்கள் பேருந்தில் இருந்த டீசல் டேங்கை திறந்தார்கள் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேலும் என்னுடைய விசாரணையில் பொன்னரசு, சிவசங்கர் ஆகியோர்கள் பஸ்ஸின் ெ ஹட் லைட்டை உடைத்துவிட்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் தவறு. அதே போல் அழகிரி, ரவி, ஜெயசீலன், முருகன், வெங்கடேசன், குமார், கிருஷ்ணமூர்த்தி, செந்தில் ஆகியோர்கள் கல்லால் பக்காட்டு மற்றும் முன்பக்க கண்ணாடியை உடைத்துவிட்டார்கள் என்று நான் போலீசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த சம்பவம் எங்கள்

ஊரை சேர்ந்த தலைவர் ராமசாமி அவர் உடனிருந்து தூண்டிவிட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இதனால் பேருந்தில் இருந்த பயணிகள் மற்றும் அதன் ஓட்டுனரும் பேருந்தை விட்டு இறங்கி ஓடிவிட்டார்கள் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

பேருந்தில் இருந்த நடத்துனர் போன் செய்தார் என்றும், எங்கள் ஊரை சேர்ந்த பேருந்தை எரித்தவரின் பெயர், விலாசம் ஆகியவற்றை நான் தான் போலீசாரிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. மேலும் என்னுடைய விசாரணையில் அவ்வாறு எரிந்துக்கொண்டிருந்த பேருந்தை தீயணைப்பு துறையினரும், கல்லாவி போலீசாரும் அந்த தீயை அணைத்தார்கள் என்றும், நான் பயந்துக்கொண்டு ஊருக்கு ஓடிவிட்டேன் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மீண்டும் ஒருமுறை போலீசார் மறுமுறை விசாரித்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் அது தவறு. இந்த எதிரி எங்கள் ஊர்காரர் என்பதால் போலீசாரிடம் சொன்ன விவரத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- XXX,
Principal Sessions Judge,
Krishnagiri.